


30.05.2025

தலைப்பு செய்திகள்

- தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் போராட்டம் தொடரும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி உறுதிபட தெரிவித்துள்ளார்.
- அமர்நாத் யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு அனைத்து வசதிகளும் முழுமையாக செய்து கொடுக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா கூறியுள்ளார்.
- தமிழ்நாட்டில் 4 புதிய அரசு கலை அறிவியல் கல்லூரிகள் விரைவில் தொடங்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- கிராமங்களின் அடிப்படை தேவைகளை சீர்செய்யும் பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப் படுவதாக மாநில அமைச்சர் திரு. பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.
- நீலகிரி, கோவை, தென்காசி, திருநெல்வேலி, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் போராட்டம் தொடரும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி உறுதிபட தெரிவித்துள்ளார்.

பீஹார் மாநிலத்தில் 48 ஆயிரத்து 520 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித்திட்டங்களை துவக்கி வைத்ததோடு, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி பேசியஅவர், உள்நாட்டிலிருந்தோ, எல்லைகளுக்கு அப்பாலில் இருந்தோ, எவ்வித அச்சுறுத்தல் ஏற்பட்டாலும் அதனை முழுமையாக தகர்த்து அழிக்கப்படும் என்றார்.

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் இந்திய மகளிரின் ஆற்றலையும், எல்லை பாதுகாப்பு படையினரின் அளப்பறிய துணிச்சலையும், தன்னிகரற்ற வீரத்தையும் கண்ணோக்கியதாக எடுத்துரைத்தார்.

தீவிரவாதமோ, நக்சல் பயங்கரவாதமோ எதுவாக இருந்தாலும் மிக விரைவாகவும், தீர்க்கத்துடனும் எதிர்கொள்ளப்படும் என்றும் பிரதமர் எச்சரித்தார்.

❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

அமர்நாத் யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு படை வீரர்கள் முழு அளவில் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்வதன் அவசியத்தையும் தமது சமூக வலைதளப்பதிவில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே பாகிஸ்தான் தாக்குதலுக்கு உள்ளான பூஞ்ச் பகுதியை இன்று பார்வையிட்ட அமைச்சர், பாதிக்கப்பட்ட பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

இந்நிகழ்வின் போது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதியுதவியையும், உயிரிழந்தோர் குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பிற்கான அனுமதி ஆணைகளையும் அமைச்சர் வழங்கினார்.

வரும் 3-ம் தேதி தொடங்கவுள்ள அமர்நாத் யாத்திரைக்கான முன்னேற்பாட்டு பணிகளையும் திரு. அமித்ஷா ஆய்வுசெய்தார்.

❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

ஆபரேஷன் சிந்தூர் தாக்குதல் இன்னும் முடிவடையவில்லை என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

கோவாவில் இன்று இதனை தெரிவித்த அவர், பாகிஸ்தான் மீண்டும் தவறிழைத்தால் இந்தியாவின் பதிலடி மிகக்கடுமையாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

தீவிரவாதத்தை வேரோடு அகற்றுவதில் இந்தியா எவ்வித தயக்கமும் கொள்ளாது என்று அவர் குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தைகளை நடத்த பாகிஸ்தான் விரும்பினால் ஹபீஸ் சையத் மசூத் அசார் உள்ளிட்டோரை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்.

இதனிடையே பாதுகாப்பு அமைச்சகத்தின் மினி ரத்னா அந்தஸ்து பெற்ற 3 பொதுத்துறை நிறுவனங்களை திரு. ராஜ்நாத் சிங் பாராட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

அனைத்து கட்சி குழுவினர்

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையை தொடர்ந்து தீவிரவாத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து பி.ஜே.பி. நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பைஜெயந்த் பாண்டா தலைமையிலான அனைத்து கட்சி பாராளுமன்ற குழுவினர், சவுதி அரேபியா பிரதிநிதிகளிடம் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டனர்.

பஹல்காம் தீவரவாத தாக்குதலை தொடர்ந்து இந்தியா நடத்திய துல்லியதாக்குதல் குறித்து அந்நாட்டிலுள்ள இந்திய வம்சாவளியினரிடமும் இக்குழுவினர் எடுத்துரைத்தனர்.

ரியாத்தில் உள்ள வளைகுடா ஆராய்ச்சி மையத்தின் தலைவர் டாக்டர் அப்துல் அஜீஸ், நைஃப் அராப் பல்கலைக்கழகத்தின் தலைவர் டாக்டர். அப்துல் மஜீத் உள்ளிட்டோருடனும் இக்குழுவினர் விரிவாக விளக்கமளித்தனர்.

தீவிரவாதத்திற்கு தக்க பதிலடி கொடுக்கப்பதற்கான செயற்கை நுண்ணறிவு மற்றும் Quantum கணினி உட்பட பல்வேறு பிரிவுகளில் ஒருங்கிணைந்து செயலாற்றுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் இக்குழுவினர் ஆலோசனை மேற்கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖

சசிதரூர்

காங்கிரஸ் உறுப்பினர் திரு. சசிதரூர் தலைமையிலான நாடாளுமன்ற குழுவினர் கொலம்பியா தலைநகர் பொஹோட்டா சென்றுள்ளனர்.

செய்தியாளர்களிடம் அங்கு பேசிய திரு. சசிதரூர், தீவிரவாதிகளை ஊக்குவிப்பவர்களையும், அவர்களை எதிர்த்து போரிடுவோரையும் ஒன்றாக கருதமுடியாது என்றார்.

திமுக உறுப்பினர் திருமதி. கனிமொழி தலைமையிலான குழுவினர் லாட்வியா நாட்டின் ரிஹா நகரிலும்,

தேசியவாத காங்கிரஸ் சரத்பவார் பிரிவை சேர்ந்த திருமதி. சுப்ரியா சுலே தலைமையிலான குழுவினர் தென்னாப்பிரிக்காவிலும், தீவிரவாதத்திற்கு இந்தியாவின் நிலைப்பாடு குறித்து எடுத்துரைத்தனர்.

❖❖❖❖❖❖❖❖

சம்பித் பத்ரா

இதனிடையே ஆபரேஷன் சிந்தூர் குறித்து காங்கிரஸ் மற்றும் தெலங்கானா கட்சிகளின் சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு பி.ஜே.பி. கண்டனம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பி.ஜே.பி. செய்தி தொடர்பாளர் திரு. சம்பித் பத்ரா இக்கருத்துக்களின் மூலம் முப்படைகளின் உணர்வுகளுக்கு காங்கிரஸ் அவதூறு பிறப்பித்திருப்பதாக குற்றம் சாட்டினார்.

அனைத்துக்கட்சி நாடாளுமன்ற பிரதிநிதிக் குழுவினர் சுற்றுலாவிற்காக உலக நாடுகளுக்கு செல்லவில்லை என்று கூறியுள்ள அவர், தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை உலக அரங்கில் எடுத்துரைப்பதற்கான முக்கிய பணியில் இக்குழுவினர் ஈடுபட்டிருப்பதாக தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியில் உள்பூசல்கள் உள்ளதாகவும் அவர் குறைகூறினார்.

❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் தேசிய விருதுகளை குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு 15 செவிலியர்களுக்கு, குடியரசு தலைவர் மாளிகையில் இன்று நடைபெற்ற விழாவில் வழங்கினார்.

செவிலியர் பணியில் அர்ப்பணிப்புடன் செயலாற்றியமைக்காக இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி.நட்டா, இணையமைச்சர்கள் திருமதி அனுப்பிரியா பட்டேல், திரு. பிரதாப் ராவ் ஜாதவ் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖

உணவு

உணவு வர்த்தகத்தில் ஈடுபடுவோர் விளம்பரங்களுக்காக நுகர்வோரை ஈர்க்கும் வகையில 100 சதவிகித உத்தரவாதங்களை வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும் என்று உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் கிராமப்புற மாணாக்கர் உயர்கல்வி பெறும் வகையில் 2025-26 கல்வியாண்டில் 4 புதிய அரசு கலை அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் வேலூர் மாவட்டம், கே.பி.குப்பம்,

திருச்சி மாவட்டம் துறையூர்,

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை,

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் ஆகிய இடங்களில் இக்கல்லூரிகள் அமையவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன் மூலம் இப்பகுதிகளிலுள்ள ஆயிரத்து 120 மாணாக்கர் பயன்பெறுவார்கள் என குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

பெரியகருப்பன்

தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் அடிப்படை தேவைகள் கண்டறியப்பட்டு சீர்செய்யும் பணிகள் மேற்கொள்ளப் படுவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் பேரூராட்சி பகுதியில் தலா ஒரு இடத்திலும், கல்லல் ஊராட்சி ஒன்றியம், கே.ஆத்தங்குடி, மருதங்குடி உள்ளிட்ட பகுதிகளில் தலா 5 லட்ச ரூபாய் மதிப்பீட்டிலும், புதிய மின்மாற்றிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இன்று துவக்கி வைத்து அவர் பேசினார்.

❖❖❖❖❖❖❖❖

கீதா ஜீவன்

தமிழ்நாட்டில் அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் இந்த ஆண்டு பள்ளிகள் திறக்கும் தினத்தன்றே புத்தங்கள் வழங்கப்படும் என்று மாநில சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் புரதச்சத்து உணவு வழங்கும் திட்டத்தை இன்று துவக்கிவைத்து

பேசியஅவர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் மூலம் ஊட்டச்சத்து உறுதி செய்யப்படுவதால் சிசு மரணங்கள் குறைந்துள்ளது என்றார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

பெரம்பலூர் மாவட்டத்தில் பாரத் நெட் திட்டத்தின்கீழ் 66 கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, அதிவேக இணையதள சேவை வழங்கப்படவுள்ளதால் இதனை செயல்படுத்த தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் வேளாண் பொறியியல் துறை சார்பில் விவசாய இயந்திரங்கள் பயன்பாடு பராமரிப்பு முகாமை மாவட்ட ஆட்சிததலைவர் திரு. மா.பிரதீப்குமார் இன்று துவக்கிவைத்தார்.

ஏராளமான வேளாண் கருவிகள் இதில் இடம்பெற்றதோடு இவற்றின் பயன்பாடு குறித்த விளக்கங்களும் இடம்பெற்றன.

❖❖❖❖❖❖❖❖

நாமக்கல் வாய்ஸ்

நாமக்கல் மாவட்டம் மோகனூர் காவிரியாற்றில் மணல் திட்டுகளில் புதைகுழிகள் அதிகம் காணப்படுவதால் பொதுமக்கள் கவனத்துடன் இருக்குமாறும் நீர்வளத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

நீலகிரி வாய்ஸ்

நீலகிரி மாவட்டம் குன்னூர் காட்டேரி பூங்காவில் மலைப்பயிர்கள் கண்காட்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு இன்று துவக்கிவைத்தார்.

முதல்முறையாக நடைபெறும் இக்கண்காட்சியில் மலை பயிர்களால் ஆன தேயிலை, இளநீர், வெற்றிலை உள்ளிட்ட பல்வேறு வடிவங்கள் காட்சிபடுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

வானிலை

நீலகிரி, கோவை, தென்காசி, திருநெல்வேலி, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று மிக கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் திரு.செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியின் 2-வது தகுதிச்சுற்று ஆட்டத்தில் இன்று சண்டிரில் குஜராத் டைட்டன்ஸ் - மும்பை இண்டியன்ஸை எதிர்கொள்கிறது.

இதில் வெற்றிபெறும் அணி நாளைமறுநாள் நடைபெறும் 3-வது தகுதிச்சுற்று ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸை எதிர்கொள்ளும்.

முதல் தகுதிச்சுற்றில் பஞ்சாப் கிங்ஸை 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்ற ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இறுதியாட்டம் வரும் 3-ம் தேதி அஹமதாபாத்தில் நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖